


அருட்பணி.ஸ்டீபன் கஸ்பார் ராஜ்
புனித.திருமுழுக்கு யோவான் ஆலயம்
சின்னாளபட்டி. திண்டுக்கல் மறைமாவட்டம்

# ஞாயிறு மறையுரை



**பொதுக்காலம்**
**14ம் வாரம்**
**ஞாயிறு**
**14.07.2024**

**திருப்பலி வாசகங்கள்**
ஆமோஸ் 7/12-15
எபேசியர் 1/3-14
மாற்கு 6/7-13

## இறைவனின் அழைப்பு நமக்கு அருளப்பட்டக் கொடை

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே ! கடந்த ஞாயிறு, நம் ஆண்டவர் இயேசுவைப்போல் இறைவாக்கினராக வாழ எசக்கியே, தூய பவுல் அழைத்த அழைப்பை ஏற்று, உள் வாங்கி சிந்தித்தோம். பொதுக்காலம் 15-ஆம் ஞாயிறாகிய இன்று நற்செய்தியைப் பறைசாற்ற நம்மை ஆண்டவர் அழைத்துப் பக்குவப்படுத்தி அனுப்ப விரும்புவதை இறைச் செய்தியாக வாசித்தோம்.

இன்றைய முதல் வாசகத்திலே, ஆடு மாடுகளை மேய்த்து வந்த ஆமோசை இறவாக்கு உரைக்க இறைவன் அழைக்கிறார். இறவனின் அழைப்பு என்பது எல்லோருக்கும் இறைவன் தரும் ஒரு கொடை. மனிதர்களாய் நாம் பிறந்ததே இறைவனின் முதல் அழைப்பாகும்.

ஆமோஸ் கி.மு. 793 753 ல் இரண்டாம் எரோபோவாம் காலத்தில் வடநாட்டில், சமாரியாவில் இறவாக்கு உரைத்தார். அப்பொழுது வடநாடான இஸ்ரயேல் பொருளாதாரத்தில் சிறப்புற்றிருந்தது. இந்த வளமும் வாழ்வும் செல்வருக்கும் வலியோருக்கும் மட்டுமே இருந்தது. ஏழை எளியோர் மேலும் நசுக்கப்பட்டு தாழ்வுற்றனர்.

அநீதியும் பொய்மையும் நிறைந்த சமூகத்தைக் கண்டு வெகுண்டெழுந்த ஆமோஸ் உண்மையை எடுத்துரைத்தார். இவர் கூறும் சமத்துவ சமூக நீதிக் கருத்துக்களை ஆளும் அதிகார வர்க்கத்தினர் ஏற்க மனமின்றி கடுமையாக எதிர்த்தனர். அவரை வடநாட்டின் சமயத் தலை நகரான பெத்தேலிலிருந்து இறைவாக்கு உரைக்காதே, இது அரசனின் புனித இடம், வேண்டுமானால் யூதேயாவுக்கு ஓடிப்போய் பிழைப்பு தேடிக்கொள் என்று இஸ்ரயேலின் அதிகாரப்பூர்வ குருவாகிய அமட்சியா விரட்டியடிக்கிறான்.

அமட்சியாவின் இவ்வார்த்தைகளைக் கேட்ட ஆமோஸ், நான் இறை வாக்கினன் அல்ல. அரசனுக்கு துதி பாடும் குழுவில் உறுப்பினனுமல்ல. பூசி மெழுகிப் பேச எனக்குத் தேவையுமல்ல. ஆடு மேய்த்துக் கொண்டிருந்த என்னை யாவே கடவுள் தேர்ந்தெடுத்து இறைவாக்குரைக்க என்னை அனுப்பினார் என்று அஞ்சா நெஞ்சத்தோடு இடித்துரைத்தார்.

ஏழையர்களின் தோள் மீது அமர்ந்து சவாரி செய்யும் மூர்க்க மனிதருக்கு எதிராக இறைவாக்குரைக்க இறைவன் என்னை அழைத்து அனுப்பினார் என்று தன் அழைப்பைப் பற்றி ஆமோஸ் கூறியதை இன்றைய முதல் வாசகத்தில் கேட்டோம். இறைவாக்கினர் எப்படியெல்லாம் வாழக்கூடாது என்பதை அமட்சியாவின் வார்த்தையிலும், எப்படி வாழ வேண்டும் என்பதை ஆமோஸின் வார்த்தையிலும் கற்றுத் தருகிறது இவ்வாசகம்.

இன்றைய இரண்டாம் வாசகம் வழியாகக்

கடவுள், நம்மை உலகம் தோன்றுமுன்னரே தம் சொந்தப் பிள்ளைகளாக நம்மை முன் குறித்துள்ளார். திருமுழுக்கின் வழியாக நம்மை கிறிஸ்தவனாய் வாழ நமக்கு இரண்டாம் அழைப்பைக் கொடுத்து, எல்லா அறிவையும் ஞானத்தையும் தந்து, தமது திருவுளத்தை மறை பொருளாக நமக்கு வெளிப்படுத்தியுள்ளார் என பவுலடியார் சிறப்பாகச் சொல்லுகிறார்.

ஆம், அன்பான இறைச் சமூகமே, கடவுளின் அழைப்பை விவிலியத்தில் வரும் மாந்தர்கள் அனைவரும் பெற்று சிறப்பான நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர் என நம்மால் அறிய முடிகிறது.

இன்றைய நற்செய்தியில் இறையாட்சி நற்செய்தியை அறிவிக்க திருத் தூதர்களை இருவர் இருவராக இயேசு அனுப்புகிறார். யூத மரபின்படி, முக்கியச் செய்தியைச் சொல்ல ஒருவரை அனுப்பாமல் இருவரை அனுப்புவதாகும்..இருவர் இருவராக அனுப்புவதில் துணையிருப்பும் குழும வாழ்வும் புலப்படுகிறது. ஒருவர் மற்றவருக்கு ஆறுதலாக, பக்கபலமாக இலட்சியத்தை நோக்கிப் பயணிக்க உதவுகிறது. இணைந்திருந்தால் தீய சக்தியை வென்று இறையாட்சியைக் கட்டியெழுப்ப முடியும்.

மக்களை நம்புங்கள். உங்களை, உங்கள் உடைமைகளை, செல்வத்தை நம்பாதீர்கள். இறைவனை மட்டுமே நம்பிச் செல்லுங்கள் என அறிவுரை தருகிறார். சீடர்களின் வாழ்வு மிக எளிய வாழ்வாக இருத்தல் அவசியம். சீடர்கள் உலகத் தேவைகளைக் குறித்துக் கவலைப்பட்த் தேவையில்லை. அதைக் கடவுள் பார்த்துக் கொள்வார். இரண்டாவது, நற்செய்தியை அறிவிப்பதே முக்கியமானதாய் இருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டிலே யூதர்கள் மனம் மாறிட பல வாய்ப்புகள் தரப்பட்டன. அவற்றை அவர்கள் அலட்சியப்படுத்தினார்கள். இப்பொழுது திருத்தூதர்கள் மனமாற அழைக்கும் செய்தி இறுதியான செய்தி. இதையும் தட்டிக் கழித்தால் தண்டனை உறுதி என்பதை மக்கள் செவிசாய்க்கவில்லையெனில், உங்கள் கால்களில் ஒட்டிய தூசியை உதறிவிட்டு வாருங்கள் எனக் கடினமான சொற்களைப் பயன்படுத்தி அனுப்பி வைக்கிறார்.

பணம், பொருள், தன்னலம், கண்டுகொள்ளாமை, வஞ்சம், வன்மம், வாய்ப்பிருந்தும் பரிந்து பேசாமை என இறுக்கத்தில் இருப்பவரிடம் மனம் மாறுங்கள். கடவுளின் திருவுளத்தைத் தெளிந்து வாழுங்கள் என்ற அறைகூவலை விடுக்க அனுப்பி வைக்கிறார்.

எகிப்தில் பாரவோனிடம் அடிமைகளாய் வாழ்ந்த மக்களை விடுவிக்க, யாவே கடவுள் மோசேயை அழைத்தார். இஸ்ரயேல் மக்களை ஆள சவுலை அரசராயிருக்க அழைத்தார். அவருக்குப் பதிலாக சிறுவன் தாவீதை இஸ்ரயேலின் அரசராயிருக்க அழைத்தார். சாமுவேலை பெரிய இறைவாக்கினராக அழைத்தார். நாசரேத்தில் வாழ்ந்த மரியா என்ற இளம் பெண்ணை இறைமகனின் தாயாக இருக்க அழைத்தார்.

இப்படி நாம் இருந்த நிலையிலிருந்து சிறந்த நிலைக்கு கடந்து செல்வதே இறைவனின் அழைப்பாகும். எனவே பவுலின் கூற்றின்படி நம்மை கிறிஸ்தவனாய் வாழ இறைவன் நமக்குத் தந்துள்ள அழைப்பு சிறப்பான அழைப்பு. இச்சிறப்பான அழைப்பு குறித்து நாம் மகிழ வேண்டும், பெருமைகொள்ள வேண்டும்.

இறையாட்சி சமூகத்தைக் கட்டி எழுப்பிட கடவுளை மையப்படுத்தி, சுய நலத்தைக் கடந்து, பிறரை மையப்படுத்தி வாழவே இறைவன் விரும்புகிறார். அதற்கே நம்மை அழைத்திருக்கிறார். சமத்துவ சமுதாயம் காணவும், ஆண்டவர் இயேசுதான் நம் வாழ்வின் மையம் எனவும், இறை வார்த்தையை முன்வைத்து தளராது நடந்து, தாழ்ந்தோரை உயர்த்திடவும், தரணியைக் காக்கவும் அருள் வேண்டி இப்பலிதனில் இணைவோம். ஆமென்.



# பொதுக்காலத்தின் 15-ஆம் ஞாயிறு

ஆமோ. 7 : 12 – 15, எபே. 1 : 3 – 14, மாற். 6 : 7 – 13

14-07-2024




பா. சேவியர்
மரியநாதபுரம், திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 15–ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இறைவனின் அழைப்பை உணரவும், படைப்பின் மேன்மையை அனுபவித்து மகிழவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கடவுளின் திருமுன் தூயோராகவும், மாசற்றோராகவும், இறைவனின் பணியாளராகவும் வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவருமே கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்களை இன்றைய வாசகங்கள் நமக்குச் சொல்லித் தருகின்றன.

நற்செய்தி அறிவிப்பது என்பது ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக மாற்றத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். சமூக நீதி, சமத்துவம் என்பதே நற்செய்தி அறிவிப்பின் சாரமாக அமைதல் வேண்டும். அந்த இலக்கை நோக்கி உழைக்கவும், பயணிக்கவும் இன்றைய வழிபாடு நமக்கு வழி காட்டுகிறது.

காலில் படிந்த தூசியைத் தட்டுவது போல், உள்ளத்தில் உள்ள கசப்பான எண்ணங்களைத் தட்டிவிட்டு இறைவனின் பணியாளராய் வாழ இயேசு நம்மை இத்திருப்பலி வழியாக அழைக்கிறார். அந்த அழைப்பை பணிவுடன் ஏற்று, இறைவனின் பணியாளராய் வாழ நெஞ்சத்தில் உறுதியையும், உள்ளத்தில் அன்பையும், செயலில் ஆற்றலையும் பொழிந்தருள வேண்டுமென்று இத்திருப்பலியில் இறைவனை மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஆடு மாடுகளை மேய்த்து வந்த ஆமோஸ் இறைவனால் இறை வாக்கு உரைக்க அனுப்பப்படுகிறார். குரு அமட்சியா தன் பிழைப்புக்கு ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சி ஆமோஸை விரட்ட முயல்கிறார். அப்போது இருவருக்கும் நடந்த உரையாடலைக் காட்சிபடுத்தும் இன்றைய முதல் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

மனிதர்கள் யாவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் இணைந்து கடவுளின் மீட்புத் திட்டத்தில் பங்கு வகித்து செயல்பட வேண்டும் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் விளக்குகிறது. கடவுள் நம்மைத் தூயோராகவும், மாசற்றோ ராகவும் வாழ கிறிஸ்துவின் வழியாக நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அன்பு இறைவா, உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்தந்தையர், அருட்கன்னியர் அனைவரும் ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை உலக மாந்தருக்கு அறிவித்து, இம்மண்ணில் இறையாட்சியை மலரச் செய்யத் தேவையான ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் அவர்கள்மேல் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) இயேசுவின் மூலம் எங்களை உமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொண்ட தந்தையே இறைவா, உம் திருமகன் இயேசு வழியாக அருளைப் பொழிந்து வரும் உம் பெரும் கருணைக்காய் உம்மைப் புகழ்ந்து நன்றி கூறுகிறோம். அந்த அருளை எம்மில் மேன்மேலும் பெருகச் செய்து, அனைத்து ஞானத்தையும் அறிவுத் திறனையும் தந்து உமது உரிமைப் பேற்றுக்கு உரியவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) விடுதலை வாழ்வு கொடுக்க உம் திருமகனையே இம்மண்ணிற்கு ஈந்த அன்பு தெய்வமே, திருமுழுக்கு பெற்ற நாங்கள் ஒவ்வொருவரும் இயேசுவின் முத்திரையைப் பெற்று, அவரது குருத்துவத்தில், இறைவாக்குப் பணியில் பங்கு பெற்று, இறைவாக்கினர் ஆமோஸைப் போல் அஞ்சா நெஞ்சுடன் உண்மைக்குச் சான்று பகர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) காலங்களைக் கடந்த எம் இறைவா, எம் பங்கில் உள்ள இளையோர் தங்கள் இளமைக் காலங்களில் உம் தூய ஆவியின் துணையை நாடி ஞானத்தைப் பெற்று, தங்கள் சொல்லாலும் செயலாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழத் தேவையான அருள் வரங்களை அவர்கள்மேல் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.